<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக் ராஜ் | நாள் | 01.11.2022 |
| தகப்பனார் பெயர் | சந்திரசேகர் | | |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :–</u>**

1) இவ்வழக்கை நான் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சொத்து விவரங்களை நான்தான் என் வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி பதிலுரையும், கூடுதல் பதிலுரையும் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான்.

2) என் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளின் பேரிலும், 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும்தான் நான் என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி அவரது பதிலுரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும் என்றால், சரிதான்.

3) என் தாத்தா பெயர் கிருஷ்ணராஜ். என் தாத்தா கிருஷ்ணராஜுக்கு மொத்தம 4 வாரிசுகள். அவர்களில் இருவர் பெண் வாரிசுகள், இருவர் ஆண் வாரிசுகள். முதலாவதாக வசந்தி, இரண்டாவதாக தமயந்தி, மூன்றாவது என் தந்தை சந்திரசேகர், நான்காவதாக என் சித்தப்பா சரவணன் ஆகியோர்கள் ஆவார்கள்.

4) என் சித்தப்பா சரவணன் என்பவர்தான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி. இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரம் 20.02.2006 ம் தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால், சரிதான்.

5) வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரங்கள் குறித்து எனக்கு தெரியும் என்றால், ஓரளவிற்கு தெரியும். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் நான் தரப்பினரா என்றால், இல்லை. அப்பத்திரத்தில் எனக்கு குறிப்பிட்டு எதுவும் சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை என்றால், சரிதான். என் அப்பாவிற்கும், என் சித்தப்பாவிற்கும்தான் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் மூலம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

6) தாவா சொத்து என் பெயரில் உள்ளது என்பதை காண்பிப்பதற்காக வா.சா.ஆ.2 பாகபிரிவினை ஆவணத்தை தவிர தற்போது வரை நான் வேறு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான்.

7) என் தந்தை சந்திரசேகர் இந்த தாவா சொத்து சம்பந்தமாக நான் உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று என் பெயரில் ஏதேனும் ஆட்சேபினையின்மை கடிதம் கொடுத்துள்ளாரா என்றால், இதுவரை இல்லை. கேட்டால் கொடுப்பார். இந்த தாவா தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு எனக்கும் என் தந்தைக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் தாவா சொத்து தற்போது எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

8) மேற்படி எனக்கும் என் தந்தைக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டுள்ளதாக சொல்லும் சங்கதியை என் வழக்குரையில் திருத்தம் செய்து எங்கேனும் தெரிவித்துள்ளேனா என்றால், இல்லை. தற்போதுதான் முதன்முதலாக சொல்கிறேன்.

9) 1ம் பிரதிவாதி 31.08.2021 ம் தேதியில் தனது கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்துள்ளார் என்றால, சரிதான். மேற்படி கூடுதல் பதிலுரையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் பேரில் தனிப்பட்ட முறையில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என குறிப்பாக மறுத்துள்ளார் என்றால், தற்போதுதான் எனக்கு தெரியும்.

10) எனக்கு குறைந்தபட்சம் என் முதல்விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி சங்கதி தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக மேற்படி சங்கதி தற்போதுதான் எனக்கு தெரியும் என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.

11) 1ம் பிரதிவாதி தன் கூடுதல் பதிலுரையில் எனக்கு தாவா சொத்தின் பேரில் எவ்வித உரிமையும் இல்லை என குறிப்பாக மறுத்துள்ள நிலையிலும், உரிமை மூலம் தொடர்பாக இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கும் நிலையிலும், அவ்வாறு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் பேரில் நானும், என் தந்தையும் ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

12) மேற்படி பாகபிரிவினை பத்திரம் எந்த தேதியில் எந்த பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால், தேதி மாதம் சரியாக நினைவில்லை, 2021ம் ஆண்டு சேலம், தலைமை பதிவாளர் அலுவலக வளாகத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் அது பதிவு செய்யப்பட்டது.

13) நானும், என் தந்தையும் ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்து எந்த தாலுக்காவில் அமைந்துள்ளது என்றால், மேட்டுர் தாலுக்காவில் அமைந்துள்ளது. எனக்கும் என் தந்தைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் தாவா சொத்தும் ஒரு பாகமாக உள்ளது என்றால், சரிதான்.

14) வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரம் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து மேட்டுர் தாலுக்காவில் அமைந்துள்ள நிலையில் தாவா சொத்தின் மீது வழக்கு நிலுவையில் உள்ளதால், மேட்டுர் தாலுக்காவிற்கு உட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை பதிவு செய்தால், வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் அதை பதிவு செய்ய மறுப்பார்கள்

என்பதால்தான் மேற்படி என் தந்தைக்கும், எனக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை சேலத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

15) நான் MBA வரை படித்துள்ளேன். தாவா 1–வது அயிட்ட சொத்திற்கான புதிய மற்றும் பழைய சர்வே எண்கள் குறித்து எனக்கு தெரியும் என்றால், தெரியும். தாவா 1–வது அயிட்ட சொத்து உட்பிரிவு செய்வதற்கு முன்பு அதன் பழைய சர்வே எண் 284/2B என்றால், சரிதான். மேற்படி சர்வே எண் 284/2B ஆனது மீண்டும் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண் 284/2B11B ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சர்வே எண் 284/2B1 மற்றும் சர்வே எண் 284/2B1B ஆக உட்பிரிவு செய்யப்பட்டது.

16) தாவா 1–வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.284 ஆகும். மேற்படி சர்வே எண்.284 ல் உள்ள சொத்துக்களை பொறுத்து மட்டும்தான் 1–வது அயிட்டமாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், ஆம். என் வழக்குரையில் நான் 1–வது அயிட்ட சொத்தாக காண்பித்துள்ள சொத்தின் சர்வே எண்ணும், தற்போது என் குறுக்கு விசாரணையில் நான் 1–வது அயிட்ட சொத்துக்கான சர்வே எண்ணாக கூறியுள்ள சர்வே எண்ணும் இரண்டுமே தவறானது என்பதால், 1–வது அயிட்ட சொத்து குறித்து நான் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

17) சர்வே எண்.284/2B உள்ள நிலமானது ஆரம்பத்தில் ஒரு திருமகவுண்டர் மகன் கோவிந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். மேற்படி கோவிந்தசாமி தனக்கு சர்வே எண்.284/2B ல் பாத்தியப்பட்ட நிலத்தை சின்னப்ப கவுண்டர் மகன் கிருஷ்ணனுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி தாவா சொத்தை 23.03.1992 ம் தேதியில்தான் விற்பனை செய்துள்ளார் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது.

18) மேற்படி கிருஷ்ணன் சர்வே எண்.284/2B ல் உள்ள சொத்தை கோவிந்தன்

மனைவி புஷ்பா என்பவருக்கு 28.09.1995ம் தேதியில் விற்பனை செய்துள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி புஷ்பா அதே சொத்தை பாலசுந்தரம் என்பவருக்கு பின்னிட்டு விற்பனை செய்துவிட்டார் என்றால், எனக்கு அதைப்பற்றி தெரியாது, ஆனால் மேற்படி சொத்து குறித்து பல விற்பனைகள் நடந்த விவரம் எனக்கு தெரியும்.

19) மேற்படி பாலசுந்தரம் வகையறா சர்வே எண்.284/2Bல் உள்ள மேற்படி சொத்தை என் சித்தப்பா 1ம் பிரதிவாதிக்கு 27.11.2003ம் தேதியில் விற்பனை செய்துள்ளார்கள் என்றால், சரிதான். மேற்படி கிரய தேதியிலிருந்து 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்றால், சரிதான்.

20) மேற்படி பாலசுந்தரம் வகையறாவிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தில் மேற்படி சொத்தின் கிழக்கு புறத்தில் தடவழி பாத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி பாதை 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு மேற்குபுறத்தில்தான் உள்ளது, அது அனைவருக்கும் பொதுவான பொது வழிப்பாதை ஆகும்.

21) அவ்வாறு 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு மேற்குபுறத்தில் பொதுவழித்தடம் உள்ளது என்பதை காண்பிப்பதற்காக நான் ஏதேனும் வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் சொல்வதுபோல் எவ்வித பொதுவழித்தடமும் இல்லை என்றாலும், இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்றாலும், சரியல்ல.

22) 20.02.2006ம் தேதியிட்ட வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்,

சரிதான். 1ம் பிரதிவாதி தாவா 1–வது அயிட்ட சொத்தை கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தின் முதல் மூலப்பத்திரம் 1992ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால், சரிதான். தற்போது ஆவணங்களை காண்பித்த வகையில் எனக்கு தெரியும்.

23) எனவே 1992ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதிக்கு தாவா 1–வது அயிட்ட சொத்தின் மீது உரிமை எழுந்துள்ளது என்றாலும், 2006ம் ஆண்டு என் தந்தைக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினையில் இருந்துதான் 1ம் பிரதிவாதிக்கு தாவா 1–வது அயிட்ட சொத்தில் உரிமை ஏற்படுவதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.